செ.வெ.எண்: 51 நாள்: 31.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 177 நபர்களுக்கு ரூ.18 இலட்சத்து 19 ஆயிரத்து 180 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (31.03.2017) வழங்கினார்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழக அரசின் சார்பாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு வகையான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதில், குறிப்பாக இரண்டு கால்கள் செயல்கள் இழந்த மற்றும் முற்றிலும் நடக்க இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 22 **நபர்களுக்கு ரூ.12 இலட்சத்து 91 ஆயிரத்து 180** மதிப்பில் வழங்கப்பட்டது.

மேலும், லேன்கோ பவுன்டேஷன் கும்பகோணம் மூலம் (கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதி) Community Social Responsibility நிதித்திட்டத்தின் கீழ் 70 நபர்களுக்கு செயற்கை அவையங்களும் (கால்கள்), 77 நபர்களுக்கு ஊன்றுகோல்களும், 8 நபர்களுக்கு முடநீக்கு சாதனைங்களும் என ஆகமொத்தம் 155 **நபர்களுக்கு ரூ.5 இலட்சத்து 28 ஆயிரம்** மதிப்பில் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, இம்மாவட்டத்திலுள்ள தகுதியான மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை பெற மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் விண்ணப்பித்து பயன்பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எம்.இம்தியாஸ்முகமது, இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வ.சீனிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.